# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1809/25 - 2013 මැයි 10 වැනි සිකුරාදා - 2013.05.10

***1809/25 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் இல. : 4/3/4/2011எப்.எச்/355.
எனது இல. : பீஈஆர்/4/5/2/26.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணிகளின் விபரம் :

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், 744 ஏ இலக்க, தூவேகொட கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள நில அளவை அதிபரால் தயாரிக்கப்பட்ட, மு. பி. கா 4370 என்ற வரைபடத்தில் இல. 01 மற்றும் 02 எனக் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளின் விபரம் :

**01. துண்டு இல. 01**
காணியின் பெயர் : தூவேஓவிட ; விபரம் : கடற்றொழில் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கல்கதவில சந்தை அமைப்பதற்கான காணி சுவீகரித்தல் ; உரிமை கோருபவர் : எச். வீ. எச். கருனாரத்ன, இல. 325 காலி வீதி பேருவளை ; விஸ்தீரணம் : 0.4684 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 02**
காணியின் பெயர் : தூவேஓவிட ; விபரம் : கடற்றொழில் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கல்கதவில சந்தை அமைப்பதற்கான காணி சுவீகரித்தல் ; உரிமை கோருபவர் : டீ. ஜே. பியங்கா ஜயலத், முகம்திரம்வத்த, கல்கதவில பயாகல ; விஸ்தீரணம் : 0.0304 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு பேருவளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எஸ். ஜனக ஸ்ரீ சந்ரகுப்த,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பேருவளை,
2013.04.19.

05 - 673

---

திருத்தம்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 7/3/1/13/இராணு/சு.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் இல. 1553/8, 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதிய மற்றும் 1794/1, 2013 சனவரி மாதம் 21 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உரிமை கோறல் பரிசீலனை 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு என்பதாக திருத்தப்படுகிறது என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

டபிள்யூ. எம். ஆனந்த,
பிரதேச செயலாளர்,
பல்லேபொல.

குறிப்பு இல. எல்டீ/05/2005/டீ/7.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
பிரதேச செயலாளர் அலுவலகம்,
பல்லேபொல,
2013.04.10.

05 - 672